**கேகாலை பிரதேச சபை - 2023**

-------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கேகாலை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தும் தகவல்களின் பொழிப்புடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கேகாலை பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்குகளை சமர்ப்பிப்பதன் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வழக்கு கட்டணமாக ருபா 123,000 செலவிட்டிருந்த போதும், அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெயிப்படுத்தியிருக்கவில்லை. | மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று காணப்படுவதெென. | வழக்கு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

#### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காண்பித்து இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். உட்படுத்துவதென. | காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | புணிகள் பூர்த்தி செய்யப்பட்ட 03 வேலைகளின் பெறுமதி ரூபா 1,875,027 தொகை கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதென. | கணக்குகளை சரியாக தயாரிக்க வேண்டும் |
| (இ) | 2023 திசெம்பர் 31 திகதிக்கு மருந்து களஞ்சிய மீதி ரூபா 1,064,956 தொகை நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டு இருந்தது. | ஏதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதென. | - மேற்படி - |
| (ஈ) | 2015 ஆண்டில் ஓய்வூதிய திணைக்களத்திற்கு சம்பளம் செலுத்த வேண்டிய ரூபா 75,908 தொகை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது, | 2024 ஆண்டில் தீர்ப்பதென. | - மேற்படி - |

**1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்**

(அ) 11 கணக்கு விடயங்களில் 2023 திசெம்பர் 31 திகதியன்று அட்டவணை பிரகார மீதி மற்றும் நிலையான சொத்து பதிவேட்டின் பிரகாரம் அத்திகதியில் அம் மீதிகளிற்கு இடையில் ரூபா 13,314,423 ஆன வித்தியாசம் நிலவியது.

(ஆ) 02 கணக்கு விடயங்களில் 2023 திசெம்பர் 31 திகதியன்று நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதி மற்றும் பண்டக் கணிப்பீட்டறிக்கை பிரகாரம் அத்திகதியில் அம் மீதிகளிற்கு இடையில் ரூபா 1,067,033 ஆன வித்தியாசம் நிலவியது.

**1.6.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

கூட்டுத் தொகை ரூபா 67,957,743 ஆன 05 கணக்கு விடயங்களின் நிலையான சொத்து பதிவேடு மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 119 | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் விதிக்கப்பட்ட ரூபா 19,200 மிகை அறவீட்டை பொறுப்புவாய்ந்த அலுவலர்களிடமிருந்து அறவிட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதென. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பிரிவு | 16 வாகனங்களின் எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | அப் பரீட்சிப்பு தற்போது இடம்பெற்று வருவதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2020 ஒக்டோபர் 02 திகதிய இலக்கம் 2020/05 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான ரூபா 971,877 ஆன 02 வாகனங்கள் 10 ஆண்டுகள் முதல் 13 ஆண்டுகளற்கு இடையிலான காலமாக செயலற்று காணப்பட்ட போதும் தேவையான அங்கீகாரம் கிடைக்காததால் பராதீனம் செய்திருக்கவல்லை. | இது தொடர்பாக பிரதான செயலாளரிற்கு மீண்டும் கதெமொள்றை அனுப்புவதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2010 மார்ச் 24 திகதிய இலக்கம் 08/2010 உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கை கோவை | அதிகார பிரதேசத்திற்குரிய 49 மயானங்களை, மயானங்களாக அறிவித்து அதன் உரிமையை சுவீகரித்து மதிப்பிட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அந்த ஆதனத்திலுள்ள மரங்கள் பற்றிய பதிவேடொன்றும் பராமரிக்கப்பட்டு இருக்கவில்லை. | உரிமையை சுவீகரித்து மதிப்பிட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதெனவும் பலன் பெற்றுக் கொள்ளக் கூடிய மற்றும் முடியாத மர பதிவேடொன்றை பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படுவதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடள் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 35,890,664 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 42,347,642 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான வகை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 3,578,150 | 4,134,358 | 4,452,973 | 1,616,569 | 3,237,700 | 3,368,627 | 2,148,977 | 2,345,531 |
| (ii) | வாடகை | 3,113,500 | 2,844,578 | 2,732,243 | 270,834 | 4,134,400 | 3,904,325 | 3,721,175 | 280,745 |
| (iii) | அனுமதிப்பத் திர கட்டணம் | 780,100 | 749,495 | 749,495 | - | 980,100 | 882,246 | 882,246 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 8,659,000 | 8,470,637 | 7,070,911 | 1,399,726 | 3,996,500 | 6,160,291 | 4,256,085 | 1,904,205 |
| | | 16,130,750 | 16,199,068 | 15,005,622 | 3,287,129 | 12,348,700 | 14,315,489 | 11,008,483 | 4,530,481 |

#### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியன்று 05 ஆண்டுகளை விட பழையான ரூபா 541,983 தொகை நிலுவை வீதவரி, ஏக்கர் வரி மற்றும் வாடகை மீதிகள் காணப்பட்டன. | வருமானம் அறவிட நடவடிக்கை எடுப்பதெனை. | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டில் கூடுதலாக செலுத்திய ரூபா 34,384 தொகையை மீள் அறவிட்டிருக்கவில்லை. | விரைவில் கண்டறிந்து தீர்ப்பதென. | கூடுதல் கொடுப்பனவை மீள் அறவிட வேண்டும். |
| (ஆ) | 2022 ஆண்டில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட மொரொன்தொட பொது சந்தைக் கட்டிடத் தொகுதியின் மேல் மாடி திட்டமிட்டவாறு வாடகைக்கு வழங்க முடியாது போனதில் தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்திடம் பெறுக் கொண்ட ரூபா 9,000,000 தொகையை தீர்க்க முடியாதிருந்தது. | வருமானம் ஈட்டிக் கொள்ள விரைவில் மேற்கொள்வதெனவும் மீண்டும் இவ்வாறான நடவடிக்கைகள் இடம் பெறாதவன்னம் பொறுப்பேற்பதென. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை ஈட்டிக் கொள்ள வேண்டும். |
| (இ) | ஏக்கர் 1 ½ ஆன ரங்வல பொது மயானத்தை 2019 ஆண்டில் பொது மயானமாக அபிவிருத்தி செய்ய உத்தேசித்திருந்த போதும், அதனை அடைந்திருக்கவில்லை. | விரைவில் தகவல்களை தேடிக் கொண்டு ரங்வல பொது மயானத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | உத்சேித்தவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தன்னியக்க தையல் இயந்திரமொன்று 2022 முதல் பயன்படாது காணப்படுவதுடன் 2021 ஆண்டில் கொள்வனவு செய்த ரூபா 48,800 ஆன 160 லீற்றர் 08 இயற்கை பசளை பாத்திரங்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்காது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | ஆடைகள் மற்றும் பைகள் இயந்திர சுயதொழில் பயிற்சி நிகழ்சித் திட்டமொன்று 2024 இல் மீண்டும் ஆரம்பித்துள்ளதுடன் இயற்கை பசளை பாத்திரங்களை சபைக்குரிய பொது இடங்களிற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதென. | பயன்படுத்தாத சொத்துக்களை பயன்படுத்த வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,585,521 ஆன 03 வாகனங்கள் மற்றும் நீர் பவுசர் ஒன்றும் 06 மாதங்களிற்கும் 13 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமாக செயலற்று நிலவின. | வாகனங்கள் 02 இனை பராதீனம் செய்வதென மற்றும் நீர் பவுசரை திருத்தி பயன்படுத்துவதென. | சொத்துக்களை பயன்படுத்தாது வைத்திருக்கக் கூடாது. |
| (ஆ) | மதியநேர பாதுகாப்பு நிலையமொன்று ஓராண்டிற்கு அதிக காலமாக பழுதடைந்த பொருட்களை களஞ்சியப்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | இப் பெருட்களின் பராதீன நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருவதென. | சொத்துக்களை பயன்படுத்தாது வைத்திருக்கக் கூடாது. |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகார ஆளணியினரில் 79 ஆவதுடன் அவற்றில் 10 வெற்றிடங்கள் மற்றும் 14 பேர்களின் மிகையும் நிலவின. | 2023.12.31 திகதியன்று வெற்றிட பதவி எண்ணிக்கை 10 மற்றும் 14 பேர்களின் மிகையும் நிலவின. | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ளவும், மிகையை ஆக்கபூர்வமாக இணைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |